1970 நவம்பர் 26]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஒன்று.

(இ) சுமார் 3,000 கிலோ யூகலிப்டஸ் எண்ணெய் ஆண்டு தோறும் தயாரிக்கப்படுகிறது.

திரு. எம். பூபதி : தலைவர் அவர்களே, யூகலிப்டஸ் எண்ணெய் மற்ற மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகிறதா? இதன்விளைவாக அரசுக்கு என்ன லாபம் கிடைக்கிறது?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, இந்த யூகலிப்டஸ் அடுத்த மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தில் 250 இடங்களில் குடிசைத் தொழிலாக, கற்பூர இலையை ஏலத்தில் எடுத்துக் கொண்டு வந்து எண்ணெய் தயார் செய்கிறார்கள். தனியார் துறைகளிலும் அரசாங்கத் துறையிலும் இதைச் செய்கிறார்கள். எவ்வளவு என்ற கணக்குவிவரம் என்னிடம் தற்போது இல்லை.

திரு. சோ. கருணாநாதன் : தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் நீலகிரித் தைலம் பெருவாரியான குடும்பங்களில் வாங்குகிறார்கள். அப்படியே நகர்ப்புற மக்களுக்கும் கிராமப்புற மக்களுக்கும் வசதியாகக் கிடைக்கும்படி அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, இப்போது போதுமான அளவிற்கு, சுமார் 3 ஆயிரம் கிலோ அளவுள்ள எண்ணெய் அரசாங்கத் தொழிற்சாலை மூலமாகவும், 85 ஆயிரம் கிலோ அளவுள்ள எண்ணெய் குடிசைத் தொழில் மூலமாகவும் சேகரிக்கப்படுகிறது. இந்த எண்ணெய் சுலபமாக எங்கும் கிடைக்கிறது.

கல்பாக்கம் அணு மின் நிலையம்.

*20 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்பாக்கம் அணு மின் நிலைய வேலைகள் எப்போது பூர்த்தி அடையும்?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: கல்பாக்கம் அணு மின் நிலையத்தின் முதற் பிரிவு (200 மெ.வா. உற்பத்தித் திறன்) வேலைகள் 1974–75-ல் முடிவடையும்.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, 1974-75-ல் கல்பாக்கம் அணுமின் நிலையத்தின் முதற்பிரிவு வேலைகள் முடிவடையும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மேலும் 200 மெகவாட் மின்சார உற்பத்தித் திறன் வேலைகளை விரைவில் முடிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

[1970 நவம்பர் 26

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, துரிதமாகச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்திவிட்டு வந்திருக்கிறார்கள். இரண்டாவது அணுமின் நிலையம் வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கோரிக்கையை மத்திய அரசு ஏற்கும் தறுவாயில் இருக்கிறது.

திரு. மு. ச. சிவசாமி : தலைவர் அவர்களே, இரண்டாவது அணுமின் நிலையம் நமது மாநிலத்தில் எங்கே அமைக்க உத்தேசம் ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இரண்டாவது பிரிவும் அங்கேயே அமைக்கப்பட இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்

(அ) சட்டம், அமைதி காக்கத் தவறியதால், கல் எறியப்பட்டு திரு. மத்தி கவுடருக்கு ஏற்பட்ட விபத்து.

(ஆ) தேசியத் தலைவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதன் அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஓர் ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதாவது,

"That the business of the House do stand adjourned to discuss an urgent matter of public importance namely : the failure of the Government to maintain law and order resulting in the serious injury caused by pelting of stones to Sri Mathi Gowder, President, Coimbatore District Congress Committee, at midnight on 3rd November 1970 at Singanallur while he was travelling in a car from Dharapuram to Coimbatore."

என்று கொடுத்திருக்கிறார்கள். அதேபோல், திரு. க. இராமமூர்த்தி அவர்களும் ஓர் ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதாவது,

"The need to take steps for the safety of our National Leaders keeping in view the stone throwing incident on the car in which Thiru K. Kamaraj, M.P. was travelling in Coimbatore district."

என்று ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்.

இது எப்படிப் பேரவையை ஒற்றிவைத்து விவாதிக்கக்கூடிய அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை, முதலில் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சுருக்கமாகக் கூற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.